


**15.03.2025**

**தலைப்புச்செய்திகள்**

1. நாட்டில் மின்னணு உற்பத்திக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுவதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
2. நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்வதில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் வரும் நிதியாண்டில் வேளாண் துறைக்கு 45 ஆயிரத்து 661 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்க 17 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

4. தமிழகத்தில் 2ஆம் கட்ட பறவைகள் கணக்கெடுக்கும் பணிகள் இன்று தொடங்கின.

5. மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் மும்பையில் இன்று டெல்லி கேப்பிட்டல்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

***********

**அஷ்விணி வைஷ்ணவ்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு மின்னணு உற்பத்திக்கு உயர் முன்னுரிமை வழங்குவதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மின்னணுவியல் துறையில் 2-ஆவது பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா வளர்ச்சிபெற்றுள்ள நிலையில் இது சார்ந்த தொழில்நுட்ப திட்டங்களை மத்திய அரசு ஊக்குவிப்பதாக எடுத்துரைத்தார்.

தமிழகத்திற்கு மத்திய அரசு சிறப்பான இடத்தை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சென்னை தையூர் அருகே இந்திய தகவல் தொழில்நுட்ப உயர் கல்வி மையத்தின் ஹைபர் லூப் புதிய திட்டம் சோதனை தருவாயில் உள்ளதாகவும், இந்த சிறப்பான முயற்சிக்கு இக்கல்வி மையத்தை பாராட்டுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

இதனை தொடர்ந்து திருவள்ளூரை அடுத்த பண்ணூரில் ZETWERK உயர் தொழில்நுட்ப தனியார் மின்னணு நிறுவனத்தை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தொடங்கிவைத்தார்.

மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா உடனிருந்தார்.

சென்னை அடையார் உயர் தகவல் தொழில்நுட்ப கல்விகழகத்தின் கணினி மையம் உள்ளிட்ட பல்வேறு உயர் தொழில்நுட்ப திட்டங்களை அமைச்சர் இன்று பார்வையிடுகிறார்.

***********

**நுகர்வோர் உரிமைகள் தினம்**

நுகர்வோர் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்தை ஒட்டி இணையதள கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அமைச்சர், நுகர்வோர் ஆளுமைக்காக அவர்களுக்கான தீர்வாயங்களை அரசு நவீனபடுத்தி உள்ளதாக குறிப்பிட்டார்.

முறைகேடான வர்த்தக நடவடிக்கைகளால் பாதிக்கப்படாத வகையில் தேசிய நுகர்வோர் உதவி எண் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் எடுத்துரைத்தார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் இதுசார்ந்த புதுமையான படைப்பாற்றல் திட்டங்களையும் அரசு ஊக்குவிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நுகர்வோர் வளத்திற்கும் நுகர்வோர் பாதுகாப்பிற்கும் அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

“நீடித்த வாழ்க்கை முறைகளுக்கான மாற்றங்கள்” என்ற கருப்பொருளுடன் இந்தாண்டு நுகர்வோர்களுக்கான உரிமைகளை பாதுகாத்து நிலைநாட்டுவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

ராணிப்பேட்டையில் பள்ளி கல்லூரி மாணாக்கருக்கு நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு போட்டிகள் இன்று நடைபெற்றன.

***********

**மன்-கீ-பாத்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன்-கீ-பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 120ஆவது முறையாக வரும் 30ஆம் தேதி உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய தங்களது எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை பொதுமக்கள் 1800 11 7800 என்ற இலவச எண், mygov இணையதளம், நமோ செயலி உள்ளிட்டவற்றில் வரும் 28ஆம் தேதிவரை தெரிவிக்கலாம்.

***********

**கஜேந்திரசிங் ஷெகாவத்**

மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தஞ்சை தென் மண்டல கலாச்சார மையம் சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கம்பராமாயண பாராயண நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு காட்டழகிய சிங்கர் திருக்கோவில் வளாகத்தில் வரும் செவ்வாய்கிழமை இந்நிகழ்வை துவக்கிவைக்கிறார்.

இளைய தலைமுறையினரிடையே கம்பராமாயணம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், இதுதொடர்பான இலக்கியத்தை முன்னெடுத்து செல்லவும் இந்நடவடிக்கை.

கம்பராமாயண நடன நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

மயிலாடுதுறை மாவட்டம் தேரழுந்தூரில் கம்பர் பிறந்த கம்பர்மேடில் வரும் 20ஆம் தேதிமுதல் 10 நாட்களுக்கு கம்பராமாயண பாராயண நிகழ்வுகளை கோலாகலமாக நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

***********

**எல்.முருகன்**

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் காரைக்கால் வானொலி நிலையத்தில் இன்று ஆய்வு செய்வதோடு அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் இன்றுகாலை திருச்சி விமான நிலையம் வந்த அமைச்சருக்கு பிஜேபி சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

***********

**நிதிநிலை அறிக்கை – வேளாண்**

தமிழ்நாட்டில் பயிர்சாகுபடி பரப்பை அதிகரித்து உணவு தானிய உற்பத்தியை உயர்த்திட 160 கோடி ரூபாய் செலவில் சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் 2025-26ஆம் நிதியாண்டிற்கான வேளாண் நிதி நிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்து பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

**வாய்ஸ்**

வேளாண்மை செழித்திடும் வகையில் 42 கோடி ரூபாய் மதிப்பில் ஆயிரம் முதலமைச்சர் உழவர் நல சேவை மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று கூறினார்.

வேளாண் துறையில் முந்திரி வாரியம், பனை மற்றும் பலா மேம்பாட்டு இயக்கங்கள் தொடங்கப்படும் என்றார்.

விவசாய தொழில்களை எந்திரமயமாக்கும் பணிகளின் ஒருபகுதியாக மத்திய மாநில நிதி உதவியுடன் விவசாயிகளுக்கு 215 கோடி ரூபாய் மானிய விலையில் வேளாண் எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும் என்றும்,

இந்த இயந்திரங்களை பயன்படுத்தி இரண்டே முக்கால் கோடி ரூபாய் செலவில் புதிய மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்படும் என்றும் கூறினார்.

இரண்டரை கோடி ரூபாய் செலவில் திறந்தவெளி பாசன கிணறுகள் புனரமைக்கப்படும்,

மாநிலத்தில் 130 இடங்களில் வேளாண் எந்திர வாடகை மையங்கள் அமைக்கப்படும்,

மின்சார வசதி இல்லாத சுமார் ஆயிரம் விவசாயிகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் வழங்கப்படும்,

கிராமப்புற இளைஞர்கள் 300 பேரை தெரிவு செய்து வேளாண் பிரிவில் திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வேளாண் விளைபொருட்களுக்கான மதிப்பு கூட்டு மையங்கள் அமைக்கப்படும்,

திறந்தவெளி பாசன கிணறுகள் தூர்வாரி புனரமைக்கப்படும்,

51 கோடி ரூபாய் செலவில் மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்,

ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் இக்கூடங்களில் கட்டப்படும் என்றார்.

மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் மாநிலத்தில் 56 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் ஒருங்கிணைக்கப்படும்,

காலநிலை மாற்றத்தினால் விவசாயம் மற்றும் சுற்றுசூழல் சவால்களை எதிர்கொள்ள திறன் கிராமங்கள் உருவாக்கப்படும்.
தர்மபுரி கிருஷ்ணகிரி திண்டுக்கல் ராமநாதபுரம் தூத்துக்குடி விருதுநகர் மாவட்டங்களின் 51 நீர்வடி பகுதிகளில் 31 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் 68 கோடி ரூபாய் மதிப்பில் நீர்வடி பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும்,

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை பொருளீட்டு கடன் வழங்கப்படும்,

அதிக வரத்துள்ள 50 உழவர் சந்தைகளில் 8 கோடி ரூபாய் செலவில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்,

உழவர் சந்தை காய்கறிகளை வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கிட உள்ளூர் இணைய வர்த்தக இணைப்பு ஏற்படுத்தப்படும்,

வட்டாரங்கள் தோறும், தேர்வு செய்யப்பட்ட பொது சேகரிப்பு மையங்களில் வேளாண் விளைபொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

கரும்புக்கு மத்திய அரசு அறிவித்த ஆதாய விலைக்கு மேல் டன் ஒன்றுக்கு 349 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று தெரிவித்த அமைச்சர் இதனால் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் என்றார்.

இந்த திட்டத்திற்காக 297 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் 37 மாவட்டங்களில் 12 கோடி ரூபாய் மதிப்பில் இயற்கை வேளாண் திட்டம்,

ஒரு லட்சம் ஏக்கரில் மாற்று சாகுபடி திட்டம்,

52 கோடி ரூபாய் மதிப்பில் சிறுதானிய இயக்கம்

பசுமை தமிழ்நாட்டை உருவாக்க தமிழ்நாடு வேளாண் காடுகள் கொள்கை,

12 கோடி ரூபாய் மதிப்பில் பருத்தி உற்பத்தி பெருக்கு திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

உழவர்களை கிராமங்களில் நேரில் சந்தித்து தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க உழவரை தேடி வேளாண்மை திட்டம் தொடங்கப்படும்,

மாணாவாரி நிலங்களில் மண்வளத்தை மேம்படுத்த 3 லட்சம் ஏக்கர் பரப்பளவில் கோடை உழவு திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

ஊட்டசத்து வேளாண்மை இயக்கம் என்ற புதிய திட்டத்தின் கீழ் 9 லட்சம் குடும்பங்களுக்கு 75 சதவிகித மானியத்தில் எலுமிச்சை கொய்யா செடிகள் தொகுப்பு வழங்க 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்,

பாரம்பரிய காய்கறி சாகுபடியை ஊக்குவிக்க இரண்டு கோடியே 40 லட்ச ரூபாய் மதிப்பில் சிறப்பு திட்டம்,

வெங்காயத்தை சேமித்து விற்பனை செய்ய கிடங்கு அமைப்பதற்கான மானியத்திற்கு 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

விவசாயிகளின் நிலையான வருமானத்திற்காக எட்டரை கோடி ரூபாய் செலவில் மலர் சாகுபடி திட்டம் ஊக்குவிக்கப்படும்,

பாரம்பரிய மலரான மல்லிகை சாகுபடியை அதிகரிக்க ஒன்றரை கோடி ரூபாய் செலவில் சிறப்பு திட்டம் மேற்கொள்ளப்படும் என்றார்.

நல்லூர் வரகு,

வேதாரண்யம் முல்லை,

நத்தம் புளி, ஆயக்குடி கொய்யா, கப்பல்பட்டி கரும்பு-முருங்கை ஆகிய 5 வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி உருவாக்கப்படும்,

சென்னை கோவை தூத்துக்குடி மதுரையில் உயிர்ம வேளாண் விளைபொருட்களுக்கு தர நிர்ணய ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் வரும் நிதியாண்டில் வேளாண் துறைக்கு மொத்தமாக 45 ஆயிரத்து 661 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் பொதுபட்ஜெட் மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்கள் நாளை மறுநாள்முதல் 5 நாட்களுக்கு நடைபெறும்.

ஊரக பகுதிகளில் உள்ள ஏழை மகளிருக்கு நாட்டு கோழி பண்ணை அமைக்க 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

காவிரி டெல்டா பகுதிகளில் சுமார் 6 ஆயிரத்து 180 கிலோ மீட்டர் நீள, நீர்நிலைகளை தூர்வார 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்க 17 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

***********

**பறவைகள் கணக்கெடுக்கும் பணி**

தமிழகத்தில் 2ஆம் கட்டமாக நிலவாழ் பறவைகள் கணக்கெடுக்கும் பணி இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம்,

நாகை கோடியக்கரை பறவைகள் சரணாலயம் பகுதிகளில் கணக்கெடுப்பு பணிகள் நடைபெறுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம், தேரூர், அச்சன்குளம் உள்ளிட்ட இடங்களில் 7 குழுவினர் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளதாக மாவட்ட வன அலுவலர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

நெல்லை மாவட்டத்தில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பை வனக்கோட்டம் மற்றும்,

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர், கூத்தைப்பார், கிளியூர், கள்ளிக்குடி, துறையூர் உள்ளிட்ட 20 இடங்களில் பறவைகள் கணக்கெடுக்கும் பணிகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

***********

**வேலைவாய்ப்பு பயிற்சி**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பிரதமரின் வேலைவாய்ப்பு பயிற்சி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

***********

**சேலம்**

சேலம் மாவட்டத்தில் நெகிழி பயன்பாட்டை முற்றிலும் தவிர்த்து சுற்றுசூழல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

***********

**மணிமுத்தாறு**

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

***********

**கோவில்**

திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவிலில் ஆழிதேரோட்ட கொடியேற்றம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்ச்சியான ஆழித்தேரோட்டம் அடுத்த மாதம் 7 ஆம் தேதி நடைபெறும்.

***********

**கிரிக்கெட்**

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் - மும்பை இண்டியன்ஸை இன்று எதிர்கொள்கிறது.

மும்பை Brabourne விளையாட்டரங்கில் இரவு 8 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**